(இ) பண்ணைக்குச் சொந்தமாக 58.20 ஏக்கர் நிலமுள்ளது. குத்தகைக்கு சாகுபடி செய்யும் நிலத்தின் பரப்பளவு 6.16 ஏக்கர். ஆக 64.36 ஏக்கர் நிலம் உள்ளது.

(உ) ஆம். கோ 62103, கோ 6304, கோ 6317, கோ 6406, கோ. 6512 முதலிய ரகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாவட்டப் பரிசோதனையில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, சிறுக மணியிலுள்ள கரும்பு ஆராய்ச்சி நிலையம் அந்தப் பகுதியிலுள்ள கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு எந்தெந்த வகையில் பயன்தரத் தக்கதாக இருக்கிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : விதை அளவு, இடை வெளி நிர்ணயம், வடிகால் ஆழம், அறுவடை, போகத் தன்மை இவைகளைப் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த ஆய்வுகளை அங்குள்ள விவசாயிகள் உபயோகித்து, மேற்கூறியவற்றை பற்றி முடிவு செய்து வருகிறார்கள். சர்க்கரை உற்பத்தியைப் பெருக்க, விதைகளின், உபயோகம் அளவு பற்றியும் அங்குள்ள விவசாயி களுக்குச் சொல்லப்பட்டு வருகிறது.

## பச்சை வாழை பயிரிடுதல்.

* 141 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

செங்கற்பட்டு மாவட்டத்தில் மத்திய அரசின் தீவிர வாழை சாகுபடி திட்டத்தின் கீழ் எத்தனை ஏக்கரில் பச்சை வாழை பயிரிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : செங்கற்பட்டு மாவட்டத்தில் மத்திய அரசின் தீவிர வாழை சாகுபடி திட்டத்தின் கீழ் வருடம் ஒன்றுக்கு 1000 ஹெக்டேர் வீதம், மூன்றாண்டுகளில் 3,000 ஹெக்டேர் நிலத்தில் பச்சை வாழை பயிரிடத் திட்டமிடப் பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தீவிர வாழை, பச்சை வாழை, சாகுபடி திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசின் சார்பாக எந்தெந்த இடங்களில் எத்தனை எத்தனை ஏக்கர்களில் திட்டமிடப்பட் டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

1972 ஆகஸ்ட் 17]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: முதலாவதாக, செங்கற்பட்டு மாவட்டத்தில் இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதற்கான இயந்திர தெளிப்பான் வாங்க 50 சதவிகிதம் மானியம் தரப்படுகிறது. பயிர் பாதுகாப்புக்காக 50 சதவிகிதம் மானியம் தரப்படுகிறது. இதற்காக ரூ. 62,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆண்டிற்கு 62 மாதிரி திட்டங்களை முதலில் ஏற்படுத்துவதுபற்றி முடிவு செய்து, செங்கற்பட்டு மாவட்டத்தில் இந்தத் திட்டம் முதலில் துவங்கப்பட முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. இ. எஸ். தியாகராஜன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தீவிர வாழை சாகுபடிக்குத் தரப்படும் சலுகைகளை அறியலாமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: ஒரு இடத்திற்கு ரூ. 1,000 வீதம் 62 இடங்களில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இயந்திரத் தெளிப்பான்கள் வாங்க 50 சதவிகிதம் மானியமும் பயிர் பாதுகாப்புக்காக 50 சதவிகிதம் மானியமும் கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோவை செழியன்: தலைவர் அவர்களே, இந்தத் தீவிர வாழை சாகுபடி திட்டத்தின்கீழ் உற்பத்தியாகின்ற வாழையை விற்பதற்கு சரியான மார்க்கெட் இல்லாமல் விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, மொரிஷியஸ் வாழை காய்த்த உடனே கெட்டுவிடுகிறது. இதை வாங்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? பனை கார்ப்பரேஷன் அமைக்கும் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இதற்கான திட்டத்தை ஏற்பாடு செய்வதற்கான முயற்சி இருக்கிறது என்று முன்னமே சொல்லியிருக்கிறேன். அந்த முயற்சிகள் மத்திய சர்க்கார் மூலம் நடந்து வருகின்றன. இங்கே தயாரிக்கின்ற வாழையை நாம் மைசூர் போன்ற இடங்களுக்குத்தான் அனுப்ப முடிகிறது—அங்கு மார்க்கெட் இருக்கிற காரணத்தாலே. மேலும் இதை நல்ல முறையிலே உற்பத்தி செய்ய, அந்த வாழைகளுக்கு நெடுந்தூரம் கொண்டுபோவதற்கான தெம்பு இருக்கிறதா, அவைகளுடைய சக்தி என்ன என்பதை எல்லாம் உணர்ந்து வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளை இப்பொழுது ஆராய்ந்து கொண்டு வருகிறோம்.